முதல்வர் - துணை முதல்வர் - அமைச்சர்கள் திட்டமிட்டு

# ஒருங்கிணைந்து செயல்பட்டதால் மழைநீர் எங்கும் தேங்கவில்லை!

## நீர்வளத்துறை உயர் அதிகாரி தகவல்!

சென்னை, அக். 19 -
முதல்வர் மு.க. ஸ்டாலின் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் திட்டமிட்டு அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டதால் மழைநீர் எங்கும் தேங்கவில்லை என்று நீர்வளத் துறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசு கொடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் பள்ளி, கல்லூரிகள், அரசு அலுவலகங்களுக்கு விடுமுறை விடப்பட்டது. தனியார் நிறுவனங்களிலும் வீட்டில் இருந்து பணியாற்றும்படி உத்தரவிடப்பட்டது. இவ்வளவு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்ததால், பொதுமக்கள் வீடுகளில் பதுங்கிக் கொண்டனர். ஆனால் செவ்வாய்க்கிழமை மாலை மற்றும் இரவு நேரத்தில், வெளியில் வந்து பார்த்தவர்களுக்கு கடும் அதிர்ச்சி. சாலைகளில் தண்ணீர் எங்கும் தேங்கவில்லை. சுரங்கப் பாதைகளில் தண்ணீர் இருந்த சுவடே இல்லை.

வடசென்னை பகுதி தண்ணீரில் மிதக்கும். 10 முதல் 15 நாட்களுக்கு அவர்கள் தண்ணீரோடு தான் வாழ்வார்கள். அதே நிலைதான் தியாகராயர் நகர், பாண்டிபஜார், சைதாப்பேட்டை, கிண்டி, வேளச்சேரி, மடிப்பாக்கம் போன்ற பகுதிகளிலும் இருக்கும். ஆனால் இந்த பகுதிகளில் தண்ணீர் இல்லை. மக்களால் அவர்கள் கண்களையே நம்பமுடியவில்லை. முதல்நாள் மழை கொட்டுகிறது, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி எதிர்க்கட்சிகள், 2 நாள் கழித்து மழை குறைவுதான். அதனால் தான் தண்ணீர் இல்லை என்று தங்களை மட்டும் திருப்திப்படுத்திக் கொள்ள அறிக்கை விட்டு ஆறுதல் அடைந்து கொண்டனர்.

ஆனால், சென்னையில் மழை வெள்ளம் முழுமையாக வடிந்ததற்கு காரணம் முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் கே.என்.நேரு, சேகர் பாபு ஆகியோர் அயராது உழைத்தது. மாநகராட்சி, போலீஸ், நீர்வளத்துறை, தீயணைப்புத்துறை அதிகாரிகளை ஒருங்கிணைப்பு செய்ததோடு, முன்கூட்டியே திட்டமிட்டு பல நடவடிக்கைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்திருந்தார். மழை வரும் என்று தெரிந்து பல முறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இதற்காக தலைமைச் செயலாளர் முருகானந்தத்திற்கும் சில சிறப்பு உத்தரவுகளை வழங்கினார். இதனால் அவரும் அடிக்கடி அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதை தொடர்ந்து, பல அதிரடி நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டிருந்தன. குறிப்பாக, நீர்வளத்துறை செயலாளர் மணிவாசனுக்கு சிறப்பு உத்தரவுகளை முதல்வர் மு.க. ஸ்டாலினும், தலைமைச் செயலாளர் முருகானந்தமும் வழங்கினர். அதன்படி நீர்வளத்துறை சார்பில் பல அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

இதுகுறித்து நீர்வளத்துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது: பருவ மழை முன்னேற்பாடு நடவடிக்கைகள்நீர்வளத்துறை சார்பில் எடுக்கப்பட்டிருந்தது. தமிழகம் முழுவதும் ரூ.35 கோடி ஒதுக்கப்பட்டது. அதை வைத்து ஒவ்வொரு மாவட்டத்திலும் காலியான சிமெண்ட் பைகள், மணல் மூட்டைகள், மணல் கையிருப்பு, சவுக்கு கட்டைகள் வாங்கி வைக்கப்பட்டன. ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் உடைந்தால் உடனடியாக அவற்றை அடைக்கவும், பெரும் சேதம் வராமல் தவிர்க்கவும் இந்த நடைமுறைகள் தயாராக வைத்திருந்தனர்.

சென்னையில் பெரு மழை பெய்ய தொடங்கியவுடன் நாராயணபுரம் ஏரியின் ஒரு பகுதியை நீர்வளத்துறை அதிகாரிகள் உடைத்து தண்ணீரை திறந்தனர். ஆனால், பொதுமக்களே தண்ணீரை திறக்க வேண்டாம். தண்ணீர் அதிகமாக வெளியேறினால், மழை நின்றவுடன் இந்த பகுதியில் நீர்வளம் குறைந்து விடும் என்று கேட்டுக் கொண்டனர். அதன்பின்னர் நீர்வளத்துறை அதிகாரிகள் அடைத்தனர். இதனால் கடந்த முறை போல இந்த முறை நாராயணபுரம் ஏரி சிறிய மழைக்கு உடையவில்லை.

அதை தவிர, சென்னையின் முக்கிய ஆறுகளான வடக்கு பக்கிங்காம் கால்வாய், தெற்கு பக்கிங்காம் கால்வாய், கொசஸ்தலை ஆறு, கூவம், முட்டுக்காடு முகத்துவாரம் ஆகியவை தான் முக்கியமானவை. இவைகள் முறையாக இருந்தால் பெரு வெள்ளம் தவிர்க்கப்படும். இதனால் இந்த கால்வாய்களை ஏற்கனவே பலமுறை தூர்வாரியதோடு, ஆகாய தாமரைகள் அகற்றம் உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுத்திருந்தோம். இதுதவிர ஒவ்வொரு ஆறு இருக்கும் பகுதிகளில் இயந்திரங்களை தயாராக வைத்திருந்தோம்.

அதில் வடக்கு பக்கிங்காம் கால்வாய்க்கு 9 பொக்லைன் இயந்திரங்களை வைத்திருந்தோம். 5 மிதக்கும் பொக்லைன்களையும் ஆற்றில் இறக்கியிருந்தோம். 8 டிப்பர் லாரிகளை தயாராக வைத்திருந்தோம். அதேபோல தெற்கு பக்கிங்காம் கால்வாய்க்கு 4 பொக்லைன், 2 மிதக்கும் பொக்லைன், 6 டிப்பர் லாரிகளை தயாராக வைத்திருந்தோம். கொசஸ்தலை ஆறுக்கு 2 பொக்லைன், கூவம் ஆற்றுக்கு 3 பொக்லைன், 2 டிப்பர் லாரிகள், முட்டுக்காடு முகத்துவாரம் பகுதிக்கு 8 பொக்லைன், 2 டாரஸ், 9 டிப்பர் லாரிகள் வைத்திருந்தோம்.

மொத்தமாக 40 பொக்லைன்கள், 23 டிப்பர் லாரிகள் தயாராக வைத்திருந்தோம். இந்த இயந்திரங்கள் எல்லாம் மண்டலம் வாரியாக பிரித்து அந்தந்த பகுதிகளில் வைத்து பணிகளை தீவிரப்படுத்தினோம். ஒவ்வொரு மண்டலத்திற்கு ஒரு சிறப்பு அதிகாரியை நியமித்திருந்தோம். இவர்கள் மழை கொட்ட ஆரம்பித்தவுடன் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீர் வழித்தடத்தை சரி செய்தபடியே இருந்தனர். பருவமழைக்காக சிறப்பு நிதியாக ரூ.3.5 கோடி ஒதுக்கப்பட்டு இந்த பணிகள் நடந்தன. அதன்பின்னர் ரூ.2.3 கோடி ஒதுக்கப்பட்டது.

அதோடு வெளிமாவட்டத்தில் இருந்து 38 தலைமை பொறியாளர்கள் சென்னைக்கு வரழைக்கப்பட்டு அவர்களுக்கும் தனித்தனி குழுக்கள் கொடுக்கப்பட்டு நீர் அகற்றும் பணியில் ஈடுபட்டனர். இவ்வாறு மாநகராட்சி, போலீஸ், தீயணைப்புத்துறை அதிகாரிகளுடன் இணைந்து நாங்களும் சிறப்பாக பணியாற்றினோம். இதனால் தேங்கியிருந்த தண்ணீர் கால்வாயில் முறையாக சென்று கடலில் கலக்கும் பணியை செய்து முடித்தோம் . இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கொளத்தூரில் இருந்து 400 கன அடி தண்ணீர் வெளியேறும் வகையில் ஒரு சிறப்பு கல்வாய் அமைக்கப்பட்டிருந்தது. தற்போது அதை பெரிதாக்கி 1000 கன அடி தண்ணீர் செல்லும் வகையில் சுமார் 14 கி.மீ. தூரத்திற்கு கால்வாய் அமைத்திருந்தோம். 91 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் செய்யப்பட்டிருந்தது. கொளத்தூரில் உள்ள தண்ணீர், இந்த கால்வாய் மூலம் கொடுங்கையூர் பகுதி வழியாக கடலுக்கு செல்லும் வகையில் ஏற்பாடு செய்திருந்தோம்.

இதனால் ஒரே நேரத்தில் ஆயிரம் கன அடி நீர் வெளியேறியதால், கொளத்தூரில் மழை விட்டவுடனே தண்ணீர் வடிந்து விட்டது. தற்போது கொளத்தூர் பகுதி மக்கள் இதனால் நிம்மதி பெருமூச்சு விட்டுள்ளனர். இந்த திட்டப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் குறைந்தது 5 முறையாவது பார்வையிட்டு அதிகாரிகளுக்கு உத்தரவுகளை வழங்கியிருப்பார். நேற்று கூட அந்த கால்வாய் பகுதிகளை முதல்வர் பார்வையிட்டார் என்றும் நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அமைச்சரவை முடிவுகளுக்குக் கட்டுப்பட்டவர் ஆளுநர்!

## சென்னை உயர்நீதிமன்றம் கருத்து!

சென்னை, அக். 19 -
கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள வீரபாரதி, தன்னை முன்கூட்டியே விடுதலை செய்ய உத்தரவிடக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். அதில், கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேல் சிறை தண்டனை அனுபவித்து வருவதாகவும், நன்நடத்தை அடிப்படையில் முன்கூட்டியே விடுதலை செய்யக்கோரி சிறைத்துறை டிஜிபி தலைமையிலான மாநிலகுழுவிடம் மனு அளித்திருந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

இதே குற்றத்திற்காக தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருந்தவர் முன்கூட்டியே விடுதலை செய்யப் பட்டுள்ளதாகவும், உரியஆய்வு செய்தே மாநில அளவிலான குழு, முன்கூட்டியே விடுதலை செய்வது தொடர்பாக பரிந்துரை செய்தன் அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சரவை அதற்கான அனுமதியை வழங்கி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப் பட்டதாகவும் கூறியுள்ளார். ஆனால் ஆளுநர் தன்னை முன்கூட்டியே விடுதலை செய்வதற்கு ஒப்புதல் வழங்காமல் நிராகரித்து விட்டதாக சுட்டிக்காட்டியுள்ளார். இந்த உத்தரவை ரத்து செய்து தன்னை முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் எனவும் மனுவில் வீரபாரதி கேட்டுக் கொண்டிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், வி.சிவஞானம் அமர்வு, பேரறிவாளன் உள்ளிட்ட வழக்குகளில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளை மேற்கோள்காட்டி, அமைச்சரவை முடிவு களுக்கு ஆளுநர் கட்டுப்பட்டவர் என்றும், ஆளுநர் அதை மீற முடியாது என்றும் தெரிவித்துள்ளது.

இதில், ஆளுநருக்கு தனிப்பட்ட தார்மீக உரிமை இல்லை எனக் கூறி, முன்கூட்டியே விடுதலை செய்ய மறுத்த ஆளுநரின் உத்தரவை ரத்து செய்த நீதிபதிகள், மனுதாரரை முன்கூட்டியே விடுதலை செய்யக்கோரும் மனுவை மீண்டும் பரிசீலிக்க உத்தரவிட்டனர். அதுவரை அவருக்கு இடைக்கால ஜாமின் வழங்கியும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# ரூ.1500 கோடியில் நவீனமாகும் ‘ஹூண்டாய்’ தொழிற்சாலை!

சென்னை, அக். 19 -
சென்னை இருங்காட்டு கோட்டையில் உள்ள கார் தொழிற்சாலையை ரூ.1500 கோடி முதலீட்டில் நவீனமயமாக்க ஹூண்டாய் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இந்தியாவில் ஹூண்டாய் நிறுவனம் அதிக எண்ணிக்கையிலான கார்களை விற்பனை செய்து சிறந்த கார் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றாக இருக்கிறது. இந்நிறுவனம் தனது இரண்டாவது ஆலையை தமிழ்நாட்டில் அமைத்து அதிக கார்களை உற்பத்தி செய்து வருகிறது. சென்னையை அடுத்த இருங்காட்டுக் கோட்டை மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய பகுதிகளில் இந்நிறுவனத்தின் ஆலை நிறுவப்பட்டு, கார்கள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது.

அதன்படி, பெட்ரோல், டீசல் கார் என ஆண்டுக்கு 7.40 லட்சம் உற்பத்தி செய்கிறது. இந்த உற்பத்தி திறனை ஆண்டுக்கு 8.50 லட்சமாக உயர்த்தவும், எலக்ட்ரிக் கார் உற்பத்தியை அதிகரிக்கவும் இந்நிறுவனம் திட்டமிட்டது. எலக்ட்ரிக் கார் உற்பத்தியை அதிகரிக்க ஆண்டுக்கு 1 லட்சத்து 78 ஆயிரம் எலக்ட்ரிக் வாகனங்களுக்கான பேட்டரிகளை உற்பத்தி செய்ய முடியு செய்தது. இந்நிலையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடத்தை வகிக்கிறது. அதன் அடுத்த பரிணாம வளர்ச்சியாக எலக்ட்ரிக் வாகனங்கள் தயாரிப்பில் தற்போது தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உருவாகி உள்ளது.

இதற்கு தமிழ்நாட்டில் உள்ள திறன் வாய்ந்த மனித வளம், உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு ஆகியவற்றுடன் தமிழ்நாடு அரசின் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் முக்கிய காரணங்களாக உள்ளன. அதன்படி எலக்ட்ரிக் வாகனங்களுக்கு மின்னேற்றம் செய்வதற்காக அடுத்த 5 ஆண்டுகளில் தமிழகத்தில் முக்கிய நெடுஞ்சாலைகளில் 100 மின்னேற்ற நிலையங்களையும் ஹூண்டாய் நிறுவனம் அமைக்க உள்ளது.

இந்நிலையில், கடந்த ஆண்டு இறுதியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடந்தது. அதற்கு முன்னதாக, முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தானது.

அதில் ரூ.26 ஆயிரம் கோடி அளவிற்கு தமிழ்நாட்டில் கூடுதலாக முதலீடு செய்வது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டது. அந்த ஒப்பந்தத்தின்படி முதல்கட்டமாக ரூ.1,500 கோடி முதலீடு செய்வதற்கான நடவடிக்கையை ஹூண்டாய் நிறுவனம் தொடங்கியுள்ளது.

இது தொடர்பாக ஹூண்டாய் நிறுவனம் எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது: கடந்த 2023ல் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ரூ.20,000 கோடி மதிப்பில் நீண்ட கால முதலீடு ஒப்பந்தம் கையெழுத்தானது.

கடந்த ஜனவரியின் முதலீட்டாளர் மாநாட்டின் போது ரூ.6000 கோடி கூடுதல் ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இந்த முதலீட்டு நிதியிலிருந்து 2023 முதல் 2028ம் ஆண்டு வரை தொழிற்சாலையை நவீனப்படுத்தவும், விரிவுபடுத்தவும் ரூ.5000 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

இருங்காட்டுக்கோட்டையில் தற்போது 5.40 லட்சம் சதுர அடியில் செயல்பட்டு வரும் நிலையில், கூடுதலாக 1.81 லட்சம் சதுர அடியில் தொழிற்சாலையை நவீனமயமாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்காக சுற்றுச்சூழல் அனுமதிகோரி தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## அம்பாசமுத்திரம் நகரச் செயலாளர்

# கே.கே.சி.பிரபாகரன் தாயார் ஜோதிரத்தினம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 19 -
அம்பா சமுத்திரம் நகரக் கழகச் செயலாளர் கே.கே.சி. பிரபாகரன் தாயார் திருமதி ஜோதி ரத்தினம் மறைவுக்கு முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்,அம்பாசமுத்திரம் நகரக் கழக செயலாளரும் அம்பாசமுத்திரம் நகர்மன்ற தலைவரும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான கே.கே.சி. பிரபாகரன் தாயார் திருமதி ஜோதி ரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்கள் நேற்று (18.10.2024) காலையில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவலறிந்து முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, கே.கே.சி.பிரபாகரனுக்கு செய்தி அனுப்பியுள்ளார்.

## தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில்

# தொகுதி பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம்!

## அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, அக். 19 -
தூத்துக்குடி தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் தொகுதி பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம் நாளை (20.10.2024-ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.30 மணிக்கு, மாவட்டக் கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் எஸ்.அருணாச்சலம் தலைமையில் நடைபெறவுள்ளது.



2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான பணிகளை தற்போதிருந்தே துவக்கிட வேண்டுமென்று தி.மு.க தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதிய வாக்காளர் சேர்த்தல், வாக்குச்சாவடி கமிட்டியின் பணிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் பணிகள் கிளை, வார்டு, அடிப்படையிலும், பூத் அடிப்படையிலும் பணிகளை முன்னெடுப்பது மிகவும் அவசியமாகும்.

இப்பணிகளை எல்லாம் வேகப்படுத்தும் விதமாக முதலமைச்சர் சட்டமன்ற தொகுதி வாரியாக பார்வையாளர்களை நியமித்துள்ளார்.

அதனடிப்படையில் திருச்செந்தூர் தொகுதிக்கு பார்வையாளராக டாக்டர். சபி எம்.சுலைமான், திருவைகுண்டம் தொகுதிக்கு பார்வையாளராக டாக்டர்.சி. சுரேக்ஷ், ஓட்டப்பிடாரம் தொகுதிக்கு பார்வையாளராக பெருநாழி போஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொகுதி பார்வையாளர்கள் பங்கேற்கும் அறிமுக கூட்டத்தில் கழக மாநில, மாவட்ட நிர்வாகியகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ‘திராவிட மாடல்’ அரசின் மூன்றாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமை! சுப.வீரபாண்டியன் - சைதை சாதிக் சிறப்புரை!

தென்காசி.அக்.19-
தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் திராவிட மாடல் அரசின் மூன்றாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் இன்று (19.10.2024-சனிக்கிழமை)மாலை 6 மணி அளவில் சுந்தரபாண்டியபுரம் பேருந்து நிலையம் அருகில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர்,சமூக நீதி கண்காணிப்புக்குழு தலைவர் சுப. வீரபாண்டியன் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

திராவிட மாடல் அரசின் மூன்றாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் சுந்தரபாண்டியபுரம் பேருந்து நிலையம் அருகில் இன்று (19ஆம் தேதி) மாலை 6 மணி அளவில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாவட்ட அவைத்தலைவர் சுந்தர மகாலிங்கம்,மாவட்ட துணை செயலாளர்கள் தமிழ்ச்செல்வன், கென்னடி, கனிமொழி, மாவட்ட பொருளாளர் ஷெரிப், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா.செல்லத்துரை,முத்துபாண்டி, ஆறுமுகச்சாமி,சேசுராஜன்,சேக்தாவுது, பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், அருள், இராஜேஸ்வரன்,சமுத்திர பாண்டியன்,கதிர்வேல் முருகன், சாமிதுரை, தமிழ்ச்செல்வி,ரவிச்சந்திரன்,

மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தமிழ்செல்வி போஸ், ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. பேரூர் கழக செயலாளர் பண்டாரம் வரவேற்புரையாற்றுகிறார். நிகழ்ச்சியை தென்காசி கிழக்கு ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம் தொகுத்து வழங்குகிறார்.

இந்நிகழ்வில் திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர்,சமூக நீதிக் கண்காணிப்புக்குழு தலைவர் சுப. வீரபாண்டியன், தலைமைக் கழக பேச்சாளர் சைதை சாதிக் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் தென்காசி மக்களவை உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், மாநில சுற்றுச்சூழல் அணித் தலைவர் பூங்கோதை ஆலடி அருணா,மாநில விவசாய அணி இணை செயலாளர்கள் அப்துல்காதர்,செல்லப்பா,ஒன்றிய செயலாளர்கள் செல்லத்துரை, அன்பழகன்,சிவன் பாண்டியன், ரவிசங்கர்,மாரி வண்ணமுத்து, மகேஷ் மாயவன்,ஜெயக்குமார்,சீனித்துரை, திவான் ஒலி,சுரேஷ்,நகர செயலாளர்கள் சாதிர்,வெங்கடேசன்,அப்பாஸ், கணேசன்,பேரூர் செயலாளர்கள் அழகேசன்,முத்தையா, ராஜராஜன், வெள்ளத்துரை, குட்டி என்ற சங்கர், சுடலை முத்து, நெல்சன், லட்சுமணன், கோபால்,சிதம்பரம்,தங்கப்பா என்ற முகமது உசேன்,ஜெகதீசன் உள்பட மாவட்ட அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், சுந்தரபாண்டியபுரம் பேரூர் கழக நிர்வாகிகள்,கழக முன்னோடிகள், கழக பேச்சாளர்கள், கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் சுந்தரபாண்டிய புரம் பேரூராட்சி மன்றத் தலைவர் காளியம்மாள் செல்வகுமார் நன்றியுரையாற்றுகிறார்.



தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.அலுவலகத்தில் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது.நிகழ்வில் மகளிர் அணி மகளிர் தொண்டரணி தலைவர்கள் பேபி ரசப்பாத்திமா, ராஜேஸ்வரி,துணைத்தலைவர்கள் வைத்தீஸ்வரி,மாரிசெல்வி, அணி அமைப்பாளர்கள் சங்கீதா சுதாகர்(மகளிர் அணி)திவ்யா மணிகண்டன் (தொண்டரணி) மகளிர் சமூக வலைதளம் பொறுப்பாளர் ஹபீப் நிஷா, துணை அமைப்பாளர்கள் சபர்நிஷா,மாரியம்மாள்,சரஸ்வதி,தர்மசெல்வி, கார்த்திகா சுந்தரி,மல்லிகா,தனலட்சுமி முத்து லதா,விமலா ராணி, சமுத்திரக்கனி,பாண்டிராணி, ராசாத்தி உள்பட ஒன்றிய,நகர, பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணிக்கு

# ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் நியமன நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தென்காசி.அக்.19-
தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணிக்கு ஒன்றிய,நகர, பேரூர்,நிர்வாகிகள் நியமனத்திற்கான நேர்காணல் நிகழ்வு இன்று (19.10.2024 - சனிக்கிழமை) மதியம் 2 மணிக்கு சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது என தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

அது குறித்த விவரம் வருமாறு.



கழக ஒருங்கிணைப்புக் குழு ஆய்வுகூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் கழக மாநில மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.அறிவிப்பிற்கிணங்க கழக மாணவரணிக்கு தென்காசி வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகளை நியமிக்க நேர்காணல் இன்று (19.10.2024) மதியம் 2 மணி முதல் இரவு 7 மணி வரை தென்காசி வடக்கு மாவட்ட சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாநில தலைவர் ராஜீவ்காந்தி மாநில மாணவர் அணி துணைச்செயலாளர் அதலை பி.செந்தில்குமார், பூரண சங்கீதா ஆகியோர் நடத்துகின்றனர்.

எனவே நேர்காணலில் கலந்து கொள்பவர்கள் 30 வயதுக்குட்பட்ட வராகவும் அல்லது கல்லூரியில் பட்டப்படிப்போ அல்லது பட்டய படிப்போ ஆகிய ஏதேனும் ஒன்று முடித்த வராகவோ அல்லது ஏதேனும் ஒரு கல்லூரியில் பயிலும் மாணவராக இருக்க வேண்டும். ஏற்கனவே மாவட்ட கழகத்தில் மனு செய்தவர்களும்,புதிதாக கலந்து கொள்பவர்களும் நேர்காணலில் கலந்து கொள்ளலாம்.இதில் ஒரு அமைப்பாளர், 5 துணை அமைப்பாளர்கள் மற்றும் அதில் ஒரு பெண் துணை அமைப்பாளரும் நியமிக்கப்பட உள்ளனர். ஆகவே இப்பொறுப்புகளுக்கு ஆர்வமுள்ள மாணவ, மாணவியர்கள் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தெரிவித்துள்ளார்.



நெல்லை மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலம் வார்டு 31 குலவணிகர்புரத்தில் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 13 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தினை பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் துவக்கி வைத்தார்.உடன் மேயர் கோ. ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ்,மண்டல தலைவர் கதிஜா இக்லாம் பாசிலா, மாமன்ற உறுப்பினர்கள் அமுதா, சகாய ஜூலியட் மேரி,அலி சேக் மன்சூர்,பகுதி செயலாளர் துபாய் சாகுல்,துணை ஆணையர் (பொ)சந்திரமோகன்,இளநிலை பொறியாளர் ஜெயகணபதி, தகவல் தொழில் நுட்பணி மாவட்ட துணை ஒருங்கிணைப் பாளர் காசிமணி,வழக்கறிஞர் தினேஷ்,அப்துல் சுபஹானி உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.